ஆண்டவன் துணை.

அநேக புண்ணியசீலர்களால் நன்கு
மதிக்கப்பெற்ற தேசாபிமானியின்

-JUL 1924

---

# நவரத்தினபாமஞ்சரி

---

இஃது
ஈரோடு பக்கீர்மைதீன் ருவுத்தர் குமாரரும்,
பால ஜோதிட வைத்திய பண்டிதர்
E. M. அசன்கான் சாயபு அவர்களின்
மாணவராகிய

**F. M. A. காஜாமொய்தீன்**

இயற்றியதை

ஷை யூர் புண்ணிய சீலர்களின் உதவியால்

ஈரோடு :
சிவராம விலாஸ் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை ] 1924. [ அணா 2.

ஆண்டவன் துணை.

வந்தேமாதரம். அல்லாஹு அக்பர்.

# தேசாபிமானிகளின்
# நவரத்தின பாமஞ்சரி.

அவையடக்கம்.

கலித்துறை.

வனக்கோகிலமுன் பொருகோட்டான் கூவும் வகையதுபோல்
நினமுயர்வான கலைமாமறையைத் தெரிந்து செந்தேன்
இனிமைசேர் பாகு மொழிப்புலவோர்முன் னிலங்குகின்ற
மனதொடு பாவின மோதின தாலருள்வார்களென்றே.

காப்பு. வெண்பா.

தேசசக்தி மேலிட்டுச் செல்வநிலை மேவுமுயர்
தேசுபெற்ற பாரதச் செல்வரின்மேல் நேசமுடன்
தெம்பான கீதமதைச் செப்புதற்கு முன்னவனு
ரம் பாத மென்று மரண்.

## மோகனதாஸ் கரம் சந்த்ர காந்தியவர்கள் மீது.

பத்தி சாதிக்கவிடாது—என்ற வர்ணமெட்டு.

### பல்லவி.

காந்தி மகானிவரைப் போலே கண்ணில்
கண்டதுண்டோ யிப்புவி மேலே புகழ் (காந்தி)

### அநுபல்லவி.

சாந்த குணம் படைத்த வேந்தவு தாரிவர்
மாந்தர்க்கொண்டாடும் குண சாந்தர் சத்யாக்கிரக (காந்)

எத்திசை யோர் புகழும் இன்பன் சுயாட்சி நலம்
பத்தியுடன் கைகொண்ட சக்தி நிறைந்திடுமா (காந்)

காரோடு மேவியசீர் ஊரோடு வாழ்ந்திடுமா
காஜாமொப்தீனின் கீதம் கைகொண்டாமேல பிரசாதம் (காந்)

---

## பொதுக்கீதம்.

பதுமை சுந்தரியே அம்பிகையே—என்ற வர்ணமெட்டு.

### சந்தக் கண்ணிகள்.

| | | | |
|---|---|---|---|
| அருமை | சம்பவமே | தெம்புரமே | சுயநலம் |
| அடைய | பாரத | புத்ரரோர் | குலமே |
| என | சொல | வகை | பிது |
| ஏற்ற | சமயமே | தோற்ற | மேதிலா |
| தேற்றுவோம் சுய | | ஆட்சி | கொடிதனை |
| சாற்றும் | நம் மஹான் | காந்தி | கற்பனை |
| காட்டும் | சுயநிலை | மாற்ற | மேதிலை |
| யே | தொருநிலையே | இது | கதி |
| யே | எனவகைபா | பிறப் | பதி |

னாலே நாயொரு ஜாதியே யெனவே புகழ்ந்து
வாடும் ஜேயெனும் மந்த்ர மோதிடவே
தரும் பெரும் பொருமை யாய்
தேச பக்தியும் நேச பக்தியும்
வாச முற்றும் தோஷ முறற
வே படைத்தவ னால் பலித்திடும்
மேவி யித்ததி தாவு மிந்திய
ரோ ஒழுங்குடனே பெருங் கட
னை முடித் திடவே புறப்படுஞ்
சற்ஜன மிந்தியாவி லோங்கிடவே கொண்டாடுவோம்
துற்ஜன மிந்தியாவி லேங் கிடவே
செயும் நிலை அறி யவே
தேடுவோம் நல மான தொழில்களை
நாடுவோம் மலி வான கைத்தறி
போடுவோம் சலி யாமல் ராட்டினம்
கூடுவோம் தெளி வான விதிகளி
லே காஜாமொய்யத்தீன் கவிய்தி
லே கலை மயிலை வளர்ந்திடும்
பாவலன் சிரோது மகான் காந்திமேல் (அரு)

---

## தேவதாஸ் காந்தியவர்கள் மீது.

என்னை வாட்டாதே மன்மதா—என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

செல்வ தேவதாஸ் காந்திசொல் சிலாக்கியமே
சிலாக்கியமே நம்ம பாக்கியமே செல்வ (தேவ)

இவர் தேவாதி தேவர்கள் போற்றும் மஹான்
போற்றும் மஹான் நம்மைத்தேற்றும்சஹான் செல்வ (தே)

நமக்காக ஒண்ணரை யாண்டு சிறையடைந்தார்
சிறையடைந்தார் இந்யர் குறைதெரிந்த செல்வ (தேவ)

ம். கே. காந்தி தவத்துதித்த பாலகனே
பாலகனே செல்வ லோலகனே செல்வ (தேவ)

தினம் காஜா மொய்தீன் மொழியைப் படித்திடுவோம்
படித்திடுவோம் கதர் உடுத்திடுவோம் சதா (தேவ)

---

## பஞ்சாப் படுகொலையின் முக்கிய குறிப்பு.

### நொண்டிச்சிந்து.

அல்லா நீ அருள்வாய் இந்த
அவனியி லன்னியர்கள் செய்யுங்கொடுமை
சொல்ல முடியவில்லையே மனிதர்கள்
சல்லைப்படுகிறாரின் னாட்டினிலே
பொல்லாத டயரென்பவன் ஒன்றும்
சொல்லாமல் மடித்தனன் பாஞ்சாலத்தில்
கல்லாதான் செய்த மடமை தன்னை
கண்டிப்பீ ரென்னுவில் சொல்லத்திடமோ
நல்லோரையும் மடித்தான் பாலர்கள்
எல்லோரையுமே சுட்டு மடித்துவிட்டான்
கசையடி டஜனடித்தான் கற்புக்
கரசியரையு மானப்பங்கமும் செய்தான்
தவளைப்போல் ஊர்ந்திடச்செய்தான் பெரியோர்
கவலைப்பட்டு மவரை விடுக்கேனென்றான்
வேட்டுவெடி குண்டுமிட்டான். துஷ்ட
காட்டுமிருண்டிகளும் செய்யத்துணியார்
கோர்ட்டுக் கச்சேரியில் சொன்னேனும் ஒருகோட்
பாட்டையும் காணோ மிந்தியா கவர்மெண்டிலே
ஞாயம் இதற்குக் கேட்கவே வெறும் ஆ
தாயமாய் கவர்மெண்டா ரென்ன கொடுத்தார்
நியாயமாய்ச் செய்தானெனவே டயருக்கு
நாணயம் பட்டாக்கத்தி பரிசளித்தார்
வெஞ்செய லாட்சியிலே பசிக்குக் கூழ்
கஞ்சி குடிக்கவகை யில்லாதாகையால்

பாரிர் சுதந்திரத்தை நாட்டக்
சூரினர் காந்திமகா னிர்ப்பியருக்கே
எல்லோரும் ஒன்றாகக்கூடி வாழ்ந்திட
நல்லா ருரைத்தமொழி சத்தியம் ஒன்றேற
பல்லோரும் சேர்ந்திடவே அருள்வீர்?
காஜாமொய்தீன் மொழி ஓங்கிடவே.

---

## பொதுக்கீதம்

மதினமே மோரேசையா—என்ற மெட்டு.

பல்லவி.

கை ராட்டினத்தால் நூலைநூற்று சுகமடைவோம்
ராஜ போகமடைவோம் கத்தர்
உடையணிவோம் காந்தி
அடி பணிவோம் (கை)

அநுபல்லவி.

தேட்டமாய் நாமே திடங்கொள்ளுவோமே
தாட்ய சுயாட்சிமுறை பூட்டிடுவோம் வழி
காட்டிடுவோம் கொடி நாட்டிடுவோம் (கை

சிரிதை நாடி சிறப்பொடு கூடி
சித்தம் வைத்துழைத்திட வாருங்களே சேவைத்
தாருங்களே ஒன்றாய்ச் சேருங்களே (கை)

காந்திமஹான் சொல் வந்தி சதாதில்
காஜாமொய்தீனின் கீதம் பிடித்திடுவோம் கொடி
பிடித்திடுவோம் கதர் உடுத்திடுவோம் (கை)

---

ஈரோடு, ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், ஸ்ரீமான் வா. மு தங்கப்பெருமாள் பிள்ளை அவர்களின்மீது

பாலாபிஷேகம்—என்ற வர்ணமெட்டு.

பல்லவி

இராமசாமி நாயக்கரான ஸ்ரீமான் இங்கிலீஷ்
ராஜிய சட்டம்வெறுத்த பூமான்
தீரமதமான வியல் பெருமான் நேசத்
தங்கப்பெருமாள் பெருந் தனவான் (இராம)

(தொகையறு)

சீர்த்திமிகு மிந்தியா சீரோங்கவே நல்ல
சிறைவாச முற்ற புண்யர்
நேர்த்தியுடன் முஸ்லீம்கள் இந்துக்களொற்றுமை
நிலைபாக்கி வைத்த கண்டர்

(முடுகு)

நிகழ் முறை யரு மறை நெறியிவை யோதி
நிலை வழி தனில் வளர் பலபிரக் யாதி
நீடூழி யாய் பெறும் வாடாத பாலர்
நேரான செய்கையில் கார்யானு கூலர் (இராம)

(தொகையறு)

காந்திமொழி யென்றுமே தேர்ந்தகை கொண்டவர்
காருண்யரான சீலர்
சாந்த சஹாவெனும் சாத்விக் போராட்டம்
தாங்கவே வந்த சூரர்

(முடுகு)

திரு நய முறு மதி தருமவு தாரர்
தினமடி யவர்களை யருளுடெயாய் யாரர்
கருணைக் கொண்டோங்கிய காரண ராமே
காஜாமொய்தீன் கவி வாசிக்கலாமே.

---

## சீமான் N. தண்டபாணி பிள்ளை அவர்கள்மீது

இராகம்—மத்யமாவதி. தாளம்—ஆதி.

பல்லவி.

சீமானென் தெண்டபாணியே மலர்
செந்திரு தங்கிய கும்பகோணம் புரி (சீம

அநுபல்லவி

கோமான்கள் மெச்சுந்திரு
குணஞ் சிறந்தஷிர் தயம்பொருந்திய (சீமா)

சரணம்.

பூவில் செந்தமிழ் போற்று மந்திர
நாவிலென்றுமே நவில் மறையாளன்
தேவசத்தியுடன் தேசபக்தி மிகு
தேடுமுலாவுசி தலமும் பெறு
நாடிய யோசனை கோடி விளங்கிடு
நானுவித வழி தானே ரறிகிற (சீமா

நானிலக்கவி வாணர் மெச்சிடும் காஜாமொய்தீன் கீதம்
நாவெடுத்து நேரில் செப்பிட நாடுஞ்சுவை போதம்
நற்கருணை யுற்றசெய
லுற்றவரை நத்திடுவோம் (சீம

---

## பஞ்சாப் ஜனுப் டாக்டர் சைபுதீன் கிச்சிலுவின் மீது

பம்பாய்பதி மேவும்—என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

உம்பர்ப்பதி போற்றும்
சம்பன்ன மேதாவி
அன்பன் மனோதீரனே சைபுதீன்
கில்லுநயவு தாரனே புகழ்

தேச விசு வாச முற
காசி விபி லேசி றைபி
லாசை புற வாடு குண
மங்காதிட சித்தனே மகாத்மா!
சாந்தி முறைக் கியாதனே (உம்பர்)

பஞ்சாப் படுகொலை
நெஞ்சாரக் கண்டு
துணிந்தார் சுயாட்சியிலே அலிஷௌ
கத்அலி கோஷ்டியிலே மொழி
பேசி னிய வாச முற
நேச சுய ராஜி யமு
மேபெ ரிய தாகி வர
லட்சர் புரிந்தவரே சதாவும்
பட்சம் நிறைந்தவரே (உம்பர்)

காவலன் போற்றிடும்
பாவலன் காஜாமொய்
தீன்கவி நான் படித்தேன் முஸல்லீ
மான் துணை யால் விடுத்தேன் பெறி
தான நிலை யேய ரிய
வேபெ னது பாக முற
தேய நிலை யேதெ ரிய
செல்வோம் நிறை வாசமே என்றைக்கும்
கொள்வோம் சுய ராஜ்யமே (உம்பர்)

---

## வாழி

வாழி முன்னவன் மாமறை மாமுநில்
வாழி மாதவர் மன்னவர் செந்தமிழ்
வாழி நவரதனபா தமிழ் மஞ்சரி
வாழி கற்றவர் கேட்பவர் வாழியே.

---

*leat Work*

# THE SIVARAMA VILAS PRESS

**ERODE.**

# Book, Job and Colour Printer

---

த்தமான வேலை. குறைந்த கூலி.

## சிவராம விலாஸ் பிரஸ்,

ஈரோடு.

ஐயா, எங்களிடத்தில் தமிழ், இங்கிலீஷ் ஆகிய இரு பாஷை களிலும் சகலவிதமான புஸ்தகவேலைகள், பில் பாரங்கள், பீட்டீ ஷன்கள், பட்டியல்கள் முதலியன தற்காலத்திற்கேற்றவிதமாய் முத்துப்போன்ற எழுத்துகளால் அச்சடித்துத்தருவதோடும், விசித்திர பாடர்கள் கட்டிய திருமணப் பத்திரிகைகள் பலவித கலர்களிலும், வி[illegible]யாபாரிகளுக்குவேண்டிய குறிப்பு, பேரேடு, கட்டா முதலி[illegible]க்குப் புஸ்தகங்கள் அழகாகவும், உறுதியான பயிண்டுக[illegible] குறித்தகாலம் தவறாது செய்துகொடுக்கப் படும்.

**E. K.** சிவராம முதலியார்,
புரோப்ரைட்டர்.